

முதல்வர் அவர்களால் கடந்த 6ம் தேதி மாநகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் நியமன ஆணை பெற்றவர்களில் திருச்சி மாநகராட்சியில் பணிபுரிய அரசாணை பெற்றவர்கள் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களை நேரில் சந்தித்த வாழ்த்துப் பெற்றனர். உடன் மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையாளர் மதுபாலன் ஆகியோர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு, புதுக்கோட்டையில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார். முன்னதாக கீழ ராஜ வீதியிலுள்ள அண்ணா சிலையிலிருந்து அமைதி பேரணியாக புறப்பட்டு மாவட்டக் கழக அலுவலகம் வந்தடைந்தனர். நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., கவிச்சுடர் கவிதைப்பித்தன், கார்த்திக் தொண்டைமான், த.சந்திரசேகரன், அரு.வீரமணி, மாநில மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



தேசிய கைத்தறி தினம் மற்றும் சர்வதேச கூட்டுறவு ஆண்டை முன்னிட்டு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், வனவாசியில் கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையினை தொடங்கி வைத்து, பார்வையிட்டார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.பிருந்தாதேவி, டி.எம். செல்வகணபதி எம்.பி., கைத்தறித்துறை துணை இயக்குநர் ஸ்ரீதரன் மற்றும் கைத்தறி துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை சேர்ந்த நெசவாளர்கள் உள்ளனர்.

# கலைஞர் நினைவு நாளில், முத்திரை பதிக்கும் இளைஞர் அணி!




தமிழ்நாட்டில் இன்று நாம் காண்கின்ற, அனுபவிக்கின்ற நவீனங்கள் அனைத்தையும் தன் சிந்தையில் செதுக்கிச் செயல்வடிவு தந்து, இந்தியாவுக்கே முன் மாதிரி மாநிலமாக உருவாக்கியவர் நமது உயிரினும் மேலான முத்தமிழறிஞர் கலைஞர். அவரது 7ஆம் ஆண்டு நினைவு நாள் ஆகஸ்ட் 7 அன்று, உணர்வெழுச்சியை ஊட்டியது கழக இளைஞர் அணி நடத்திய கருத்தியல் முன்னெடுப்பு நிகழ்ச்சி.

தன் சாவிலும் போராட்டத்தை நடத்திக் காட்டி நம்மையெல்லாம் ஆட்க்கொண்ட மானமிகு சுயமரியாதைக்காரரின் நினைவுநாளை, உண்மையிலேயே அவர் இருந்திருந்தால் விரும்பும் வகையில் அவரது நினைவைப் போற்றும் நாளாக்கியது, இளைஞர் அணிச் செயலாளர், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் முன்னெடுப்பு.

முரசொலி நாளேடும், கலைஞர் தொலைக்காட்சியும் இணைந்து நடத்தும் கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம், இளம் திராவிட இயக்க ஆய்வாளர்களை ஊக்குவிக்க கலைஞர் நிதி நல்கைத் திட்டம் ஆகியவற்றை நமது திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் 8 நூல்களையும் வெளியிட்டார். முதலிரண்டு திட்டங்களும் மாணவர்கள் நலனில் கழகம் கொண்டுள்ள அக்கறைக்கு தெள்ளத் தெளிவான சான்றாக இருக்கிறது.

திராவிட இயக்கச் சிந்தனை கொண்ட ஊடகர்களை உருவாக்குவதன் மூலம் எதிர்காலத்தில் அறிவார்ந்த ஊடகச் சமுதாயத்தை உருவாக்க அடிநாட்டியிருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். இதழியல் முன்னோடியாக முத்தமிழறிஞர் கலைஞரை உயர்த்திப் பிடிக்கும் இந்த முயற்சி மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பினை பெற உள்ளது என்பதில் ஐயமில்லை.

பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியாதபடி அறிவிக்கப்படாத பாசிச நெருக்கடிக் காலகட்டத்தை உருவாக்கி இருக்கிறது ஒன்றியத்தை ஆளும் பாஜக. ஊடகர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டால் சுவாசத்தை நிறுத்துவோம் என்று நாடே சங் பரிவாரங்களின் வேட்டைக்காடாக மாற்றப்பட்டுள்ளது. பாஜகவின் பாசிச முகத்திரையைக் கிழிக்க முற்படும் யாவரும் காலவரையற்றுச் சிறைச்சாலை களில் அல்லப்படுகின்ற காலகட்டத்தில், அதனை எதிர்ப்பதற்கு வலுவான நான்காம் தூணாக ஊடகத் துறையை பலப்படுத்த உள்ளது கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம்.

நாடெங்கும் கல்விச் நிலையங்கள், பாடத்திட்டங்கள் பாசிசத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கிறது. NCERT வெளியிடுகின்ற பாடப் புத்தகங்கள் எல்லாம் காவிமயமாக்கப்பட்டு, உயர்கல்விக்குச் செல்லுகின்ற மாணவர்களின் மூளையெல்லாம் காவிச்சலவை செய்யப்படுகிறது. கோமியமும் சாணமும் ஆய்வுப் பொருள்களாகவும், நாடெங்கும் சனாதனம் மட்டுமே பேசுபொருளாகவும் ஆக்கப்பட்டுள்ளது அத்தகைய காலகட்டத்தில், அந்தச் சதிகளை முறியடித்து நாட்டைக் காக்க இளம் ஆய்வாளர்களை ஊக்குவிக்க வருகிறது கலைஞர் நிதி நல்கை திட்டம். அந்த ஆய்வுகளை பதிப்பிக்க தயாராக உள்ளது முத்தமிழறிஞர் பதிப்பம். இந்த முயற்சிகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் தான் பாசிசத்துக்கு எதிராக இந்த நாட்டைக் காக்கும் ஒரே சக்தி என்பதை தெளிவாக்குகிறது.

திராவிட மாடல் பயிற்சிப் பாசறை, நீட் எதிர்ப்புக் கையெழுத்து இயக்கம், தொகுதிதோறு, கலைஞர் நூலகம், அங்கு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி, வாசகர் உரையாடல், இளம் பேச்சாளர்கள் தேர்வு, பாக இளைஞர்கள் தேர்வு என்று தொடர்ந்து கழகத்தின் வேர்களை வலுப்படுத்தும் இளந்தலைவரின் முன்னெடுப்புகளில் புதுப்பாய்ச்சலாக நேற்றைய அறிவிப்புகள் வந்திருக்கின்றன.

கலைஞர் தன் காலமெல்லாம் எதற்காகப் போரிட்டாரோ அந்த இலட்சியத்தை நிறைவேற்றிடவும், தந்தைப் பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் கண்ட கனவுகளை நனவாக்கிடமும், இளைஞர் அணியின் முன்னெடுப்பினை நமது கழகத் தலைவர் திராவிட மாடல் நாயகர் மாண்புமிகு முதல்வர் அவர்களும் கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் கலைஞரது நினைவு நாளில் இந்தத் திட்டங்களை அறிவித்தது நாட்டுக்கே முன்னோடி! கலைஞரது நினைவுக்கு ஓர் மணி மாலை!

தமிழ் இனக் காவலர், முத்தமிழறிஞர் கலைஞரின் 7ஆம் ஆண்டு நினைவு தினத்தில் நமக்கு வழங்கப் பட்டுள்ள இந்தத் திட்டங்களை தமிழ் மக்களிடம் கொண்டு சேர்த்து, “புதியதோர் உலகு செய்வோம்”!

“அறம் வெல்லும்; அநீதி வீழும்”



**தமிழ் கா.அமுதரசன்**
மாணவர் அணி மாநில
துணைச் செயலாளர்



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் மாவட்டப் பொறுப்பாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்பட கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கரூர் கலைஞர் அறிவாலயத்தில் இருந்து பேருந்து நிலையம் வரை, மாபெரும் அமைதி பேரணி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ம்ஆண்டு நினைவு நாளையொட்டி நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞரின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு காரிமங்கலம் கழக அலுவலகம் மற்றும் நகரச் செயலாளர் முல்லை ரவி ஏற்பாட்டில் அரூர் பேருந்து நிலையத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். நிகழ்வில் அவைத்தலைவர் கே.மனோகரன், எஸ்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் செ.கிருஷ்ணகுமார், பேரூராட்சி தலைவர்கள் பி.கே.முரளி, இந்திராணி, துணைத் தலைவர் சூர்யா தனபால், ஆர்.வேடம்மாள் கோ.சந்திரமோகன், ந்தரராசு, சி.தென்னரசு, எம்.வீ.டி.கோபால், கண்ணபெருமாள், செங்கண்ணன், கு.தமிழழகன், கோட்டிஸ்வரன், செந்தாமரை கண்ணன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.